Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0, பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0, வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 29-3-1947 பங்குனி மீ 16உ { மலர் 25

## கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(15-3-47 குடி அரசின் தொடர்ச்சி)

பாகுனின் மனம் புரட்சியிலே பதிந்துகிடந்தது. அவர் எப்பொழுதும், புரட்சியைப் பலப்படுத்தக்கூடிய வழிகளைக் கண்டுபிடிப்பதிலே கவலையாயிருந்தார். "உலகிலே ஒழுங்கு நிலவவேண்டுமானால் தனி உடைமை ஒழிக்கப்படவேண்டும். கூட்டு ஸ்தாபனங்களின் மூலமாகக் காரியங்கள் நடைபெறவேண்டும். நான் இன்று மரித்தால் நாளை எனது உடலை புழு அரித்துவிடும் எனதுசெல்வாக்குப்பரவவேண்டும், எனக்குப் புகழ் கிடைக்கவேண்டும் என்பதல்ல எனது ஆசை. நமது லட்சியம் வெற்றி பெறவேண்டும். அதற்காக எனது உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன்" எனப் பிரான்சிலிருந்த தமது நண்பர் ஆல்பர்ட்ரிச்சார்டு என்பவருக்கு எழுதியிருக்கிறார்.

இவர் ஸ்பிட்சர்லாந்தில் வேலைசெய்துகொண்டிருக்கையில் பலர் இவரைப் பின்பற்றலானார்கள். தெற்குப் பிரான்சிலும் இவரது செல்வாக்குப் பரவலாயிற்று. இத்தாலியிலும் ஸ்பெயினிலும் வேரூன்றிற்று. ரஷ்யனாகிய நெக்கயேவ் என்பவன் இவரை ஆதரிக்கத் தொடங்கினான். ஆரம்பத்தில் நியாயப்பிரகாரமாக ஆதரிப்பதுபோல் தோன்றினாலும் கடைசியில் பாகுனியனைக் கவிழ்க்க முனைந்துவிட்டான். நெக்கயேவ் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் கலந்து உண்மையாகவே வேலைசெய்வதுபோல் நடித்து, கடைசியில் அந்தந்த ஸ்தாபனங்களிலுள்ளவர்களை ஒழிக்கச் சதி செய்வான். வெளிக்குத் தீவிரவாதிகளைப்போல் நடித்துக்கொள்வான். ஒரு ஸ்தாபனத்துக்கு விரோதமான மனப்பான்மையோடு கூடியவர்களைச் சுட்டெரித்துவிடவேண்டுமென்று பறைசாற்றுவான். இந்தமாதிரிப் பிரசாரம்செய்து வந்ததால் மற்றவர்கள் இந்த இயக்கத்தில் சேர அஞ்சி வந்தார்கள், பாகுனினுடன் ஒத்துழைப்பதுபோல் நடித்து அவரிடமிருந்த இரகசிய கடிதப் போக்குவரத்துக்களைக் கைப்பற்றிச் சென்றுவிட்டான். தனது செல்வாக்குக் குறையாமலிருக்க அவ்வப்போது வழிவகைகள் கண்டுபிடித்துக் கொண்டேயிருந்தான். அநேக இளமாதர்களைக் கற்பழித்து வந்தான். இவனுக்குப் பிறக்கிற பிள்ளைகள்தான் புரட்சியை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்று சொல்லி அவ்விளம் பெண்களை ஏமாற்றி வந்தான். கடைசியாகத் தன்னுடனுழைத்துவந்த உண்மைப் புரட்சியாளனைக் கொன்றபின் ரஷ்யாவில் உயிர்துறந்தான்.

பாகுனின் நெக்கயேவுடன் ஒத்துழைத்து வந்த காலையில் வாயினால்மட்டும் பிரசாரம் செய்து வரவில்லை. செய்கையில் அதாவது தனித்தனியாக ஆட்களைத் தலைவாங்கிவந்தான். இந்தச் செய்கை, மார்க்சின் செல்வாக்குப் பெற்ற ஜனரல் கௌன்சிலில் எதிர்ப்புக்கு இடங்கொடுத்தது. பல ஆட்சேபணைகள் தோன்றலாயின. ராஜாங்கம் எதிரியானதால் ராஜாங்க நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்றும், ராஜாங்கத்தைக் கவிழ்ப்பதிலேயே கருத்தாயிருக்கவேண்டுமென்றும் இவர் வாதாடினார்.

தொழிலாளர் சமூகத்தைக் குறித்து விரிந்த திட்டத்தை மனதில்கொண்ட மார்க்ஸ் இத்தகைய காரியங்களுக்கு இணங்கவில்லை. அரசியலில் கலந்து வேலைசெய்யவேண்டுமென்பதை இவர் ஆதரித்தார். தனித்தனியாக ஆட்களைத் தாக்குவதைக் கண்டித்தார். சர்வதேசத் தொழிலாள ஸ்விட்சர்லாந்து வகுப்பில் பாகுனின் தனக்கு ஆதரவு பெற்றுக் கொண்டார், அந்த ஆதரவைத்

கொண்டு 1870ம் வருட மத்தியில் மார்க்சுக்கு விரோதமாகச் சிவிஸ்பெடரல் கமிட்டியை உண்டுபண்ணினார். அது போல் சோஷியலிசத்துக்கும் அனார்க்கிசத்துக்கும் போர் தொடங்கலாயிற்று.

இந்தப் போர் ஆரம்பிப்பதற்குள் தொழிலாளர்களுக்கிடையே பெரிய துன்பம் சம்பவிக்கலாயிற்று. இதனால் சர்வதேச தொழிலாளர் சங்கமே பாதிக்கப்படலாயிற்று.

1870ம் வருடம் ஜூலை மாதத்தில் ஐரோப்பாகண்டத்தில் பிராங்கோ—பிரஷ்யன் யுத்தம் ஆரம்பித்தது. பிரஞ்சு தேசம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது; பாரிஸ் நகரத்தை முற்றுகை போட்டுவிட்டார்கள்.

சக்ரவர்த்தி சிம்மாசனத்தினின்று விரட்டியடிக்கப்பட்டான், பிரஜா ஆட்சி என்று பறைசாற்றப்பட்டது. 1871ல் பிரஞ்சு தேசம் யுத்தத்தைக் கைவிட்டது. அரசனை ஆதரித்துவந்த மெஜாரிட்டியினர்களைக்கொண்ட ஒரு ஜனப்பிரதிநிதி சபை ஒரு மானங்கெட்ட ஒப்பந்தத்துக்குச் சம்மதித்தது. இப்பொழுது பிரஞ்சு தேசத்தின் ஆட்சி அவர்களது கையில் வரலாயிற்று. தீவிர வாதிகளின் எதிர்ப்பையும் ஒழித்துவிட வேண்டுமென்று எண்ணி பாரிசில் ஆதிக்கம் செலுத்திவந்த பாரிஸ் நேஷனல் கார்டை கைப்பற்ற முயன்றனர்; இம்முயற்சி பலிக்கவில்லை. இவர்களைச் சுடும்படியாக உத்திரவிடப்பட்ட துருப்பு சுட மறுத்துவிட்டது. இதனால் சில மணி நேரத்திற்குள் சர்க்கார் ஓடி விட்டார்கள். இத்துடன் பாரிஸ் ஆட்சியின் இடைக்கால குழுவிய கதை முடிந்தது. தொழிலாளர் கை ஓங்கலாயிற்று.

அதைப்பற்றி இப்பொழுது விரிவாக எழுத இடமில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது ஆட்சி செலுத்துகிற கட்சியில் மூன்றில் ஒரு பகுதியை இவர்கள் கைப்பற்றிவிட்டனர் இத்தக்கட்சி வீழ்ச்சியடையவே பிரான்சிலிருந்த சர்வதேசிய சங்கமும் வீழ்ச்சியடைந்துவிட்டது, கூட்டம் கூட்டமாகத் தாக்கிவிடப்பட்டனர். முதலாளி வர்க்கத்தார் தொழிலாளர் இயக்கத்தை நசுக்க—ஒழிக்க கையாண்ட முறைகளை வாயினால் சொல்லமுடியாது. பிரஞ்சு முதலாளி ஆதிக்கத்தை ஒழிப்பது மிக காலம் செல்லும் என அங்குள்ள தொழிலாளர் நினைக்கும்படி அவ்வளவு அதைரியமடைந்துவிட்டார்கள்.

இந்நிலையில், தலைவர்களுக்குள் தகராறு இருந்து வருவதையும், ஒருவருக்கொருவர் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டு வருவதையும் கண்ட தொழிலாளர் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறவர்கள் மனச்சோர்வு அடையலாயினர். சர்வதேசிய தொழிலாளர் சங்கமே அழிந்துவிடுமோ என்று கூட நினைக்கலாயினர்.

1872ல் சர்வதேசிய தொழிலாளர் சங்கத்தின் அடுத்த மாநாடு ஹேகுவில் கூடிற்று. மாநாட்டிற்கு மார்க்சும் எஞ்சல்சும் விஜயம் செய்திருந்தனர். பாகுனின் கலந்துகொள்ளவில்லை. அவருக்குப் பதிலாகக் குவில்லாயூம்ஸ்விஸ் தொகுதிக்குப் பிரதிநிதியாக விஜயம் செய்திருந்தார். இம்மாநாட்டில் மார்க்ஸ் கட்சியினர்க்கு மெஜாரிட்டியிருந்தது. பாகுனினையும் குவில்லாயூமையும் சங்கத்தைவிட்டு நீக்க ஒரு தீர்மானம் கொண்டுவர மார்க்ஸ் கட்சியினர் முயன்றனர். அது சமயத்தில் லண்டனில் வசித்துவந்த ஸ்விஸ் தொழிலாளரான ஜங் என்பவர் யோசித்துச் செய்யும்படியாக மார்க்சையும் எஞ்சல்சையும் வேண்டிக்கொண்டார். ஆனால் எஞ்சல்ஸ் அதை லட்சியம் செய்யாமல் ஓட்களை

(தொடர்ச்சி 7ம் பக்கம்)


## இன்னும் வாங்கவில்லையா நீங்கள்?



"........இனிய எளிய நடையில் வீர உணர்ச்சியூட்டும் முறையில் பாக்கள் இயற்றப்பட்டுள்ளன. க. ச. படையினர் பாடுதற்கு ஏற்ற பாடல்கள்........"

என "குடி அரசு" கூறுகிறது.

அழகிய பதிப்பு 0-8-0 தான். கழிவு 25%

"நாமக்கல் கவிஞர் நாவன்மை....!

"......நாமக்கல் கவிஞருக்கு ஓர் சாட்டை—அல்ல—அன்பான அழைப்பு"

என "சூறாவளி" சொல்கிறது.

தனிப்பிரதி 1-0-0. கழிவு 20%

புத்தகவிலையுடன் 0-1-0 கூட்டி மணிஆர்டர் செய்க.
தபால் தலை அனுப்பவேண்டாம்.

விலாசம்:-

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவுத்திபுரம் N.A.

## மீண்டும் விசாரிக்க!

கலைஞர்களான என். எஸ், கிருஷ்ணன், எம். கே. டி. பாகவதர் ஆகியோரின் பிரிவி கவுன்சில் அப்பீல் வழக்கின் முடிவு 27ந் தேதியன்று கூறப்பட்டுள்ளது. சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு சரியல்லவென்றும், மீண்டும் விசாரித்து சட்டப்படி முடிவு செய்யவேண்டுமென்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது. எனவே, சிறிது தாமதமேற்பட்டாலும் வழக்கு வெற்றிகரமாய் முடிவடையுமென்பதை உறுதியாய் எதிர்பார்க்கலாம்.

## நீத்தார் நினைவுநாள்

31-3-47 திங்கட்கிழமைக் காலை 9மணிக்குப் பெரிய காஞ்சீபுரம் சாலைத் தெரு; 64ம் எண் இல்லத்தில், செங்கற்பட்டு மாவட்ட மன்றத் தலைவர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் 16-3-47ல் காஞ்சியில் இயற்கை எய்திய தோழர் மு. அரங்கசாமி அவர்களின் நினைவுநாள் கொண்டாடப்படும்.

அது காலை தோழர்கள் டி. எஸ் நடராசப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., ஏ. கசபதிநாயகர் பி. ஏ., பி. எல் (சப் ஜட்ஜ், கடலூர்) டி. பி. எஸ். பொன்னப்பா, அ. க. தங்கவேலர், ஆ. குப்புசாமி (எம். எல். ஏ.), எம். பொன்னுசாமி முதலியார் (காஞ்சி நகரமன்ற உறுப்பினர்), எஸ். கே. கோவிந்தராச நாயகர் (எம். எல். ஏ.) சின்னையா, க. வே. கிருட்டிணசாமி நாயகர், டி. எஸ். கண்ணபிரான் மு. இராசநாயகர், பாகூர் சாகிப் கீ. இராமலிங்கனார் எம். ஏ., சே. எஸ் முனிசாமி, சி. டி. டி. அரசு, சி. டி. நடராசன் எம். ஏ, பி. எல, என். வி. நடராசன், டி. எஸ் காஜா சாயபு, சி. என். அண்ணாதுரை எம். ஏ. ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## நெல்லை மாவட்ட தோழர்களுக்கு

நமது மாவட்டத்தில் இரண்டு தோழர்கள் கிராமங்களுக்குச் சென்று திராவிடர் கழகம் அமைக்கவேண்டுமென்றும், அடுத்தமாதம் பெரியார் அவர்கள் சுற்றுப்பிரயாணத்தில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கூறி அதற்கான செலவுகளுக்குப் பணம் வேண்டுமென்று சொல்லி பணம் பெற்றுக்கொண்டு போவதாகவும், இதுவரையிலும் 15-இடங்களிலிருந்து செய்திகள் வந்துள்ளன. அவ்விதம் வேலைசெய்ய நான் தலைமைக் கழகத்திலிருந்து யாரையும் அனுப்பவில்லை. அவ்விரு தோழர்களிடமும் கண்டிப்பாய்ப் பணம் யாரும் கொடுக்கக்கூடாதென்பதோடு, இவ்விழிச்செயல் செய்யும் தோழர்கள் மீண்டும் பணம் கேட்க வந்தால் உடனே எனக்குத் தந்தி மூலம் செய்தியனுப்பும்படிக் கேட்டுக்கொள்கிறேன். செய்தி வந்ததும் நான் வருவேன்.

அன்பன்,<br>
கே. வி. கே. சாமி,<br>
செயலாளர்.<br>
தெ. மா. திராவிடர் கழகம்,<br>
தூத்துக்குடி.

---

போளூர் திராவிடர் கழகச் சார்பில் ஓர் இலவச வாசகசாலை 9-3-47ல் தோழர் ஆ. கு. மாணிக்கம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. ஆ. கு. மாணிக்கம், ம. சிதம்பரம் செ, சி. வாசன், கோ. கிருஷ்ணமூர்த்தி ந. ஆறுமுகம் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

## பிரபலத் திருமணம்

காயல்பட்டினம் தோழர் பா. செ. மு. புகாரி அவர்களின் புதல்வர்களான தோழர்கள் எம். ஈ. எல். புகாரி, எம். எல். புகாரி, தோழர் எஸ். எஸ் அப்துல்காதர் அவர்களின் இளவல் தோழர் ஹாபிஸ் ஷாஹுல்ஹமீத் ஆலீம் ஆகிய மூவருக்கும் 12ந் தேதி இரவு பட்டணப் பிரவேசமும், 13ந் தேதி திருமணமும் வெகு சிறப்பாக நடைபெற்றன. ஏராளமான உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் வந்திருந்தனர். பலவூர்களிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.

தோழர் பாவலர் எஸ். எஸ். அப்துல் காதர் அவர்கள் தம் மகளுக்கும் தோழர் எம். ஈ. எல். புகாரிக்கும் நடந்த திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ரூ. 5 நன்கொடை வழங்கியதோடு மேற்படி மூன்று திருமணங்களுக்கும் வந்தும், வாழ்த்தனுப்பியும் சிறப்பித்த அனைவருக்கும் இதன் வாயிலாக நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

## ஆரம்ப ஆசிரியர்கள் கூட்டம்

நாமக்கல் தாலுக்கா ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் மகாசபைக்கூட்டம் தோழர் வீ. தாமோதரம் அவர்கள் தலைமையில் 23-2-47ல் நாமக்கல் கோட்டை போர்டு பாடசாலையில் நடைபெற்றது.

அரசாங்கத்தினர் ஆரம்ப ஆசிரியர்களுக்கு வகுத்துள்ள குறைந்த சம்பள விகிதத்தைக் கண்டித்து ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்தது 50-ரூபாய் மாதச் சம்பளமாக ஆக்கவேண்டுமென்றும், ஆரம்ப ஆசிரியர்களின் கிளர்ச்சியைப் புறக்கணித்த அரசாங்கத்தைக் கண்டித்தும், அவர்களின் குறைகள் கவனிக்கப்படாவிடில் நேரடி நடவடிக்கையிலிறங்குவதென்றும், அவர்களின் குறையைப் போக்காவிடில் நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டியதற்கு ஆவன செய்யும்படி, ஸ்டேட், எஸ். ஐ. டி. வி. முதலிய சங்கங்களை வற்புறுத்தியும், அரசாங்கத்தாரின் அவசர அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டித்தும், பல தீர்மானங்களும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.


# பூந்தோட்டம்

4-ம் மலர்

பெரியார் ஈ. வெ. ரா, K.A.P. விசுவநாதம், A.V.P. ஆசைத்தம்பி மற்றும் பலரின் அறிவுரைகளோடு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் அழகிய முகப்புப் படத்துடன் வெளிவரும். தனிப்பிரதி 6 அணா.

விலாசட்டுக்கு:- பூந்தோட்டம், சேலம்.

குடி அரசு

1947-ஆம் மார்ச் 29உ

# எத்தனை நாளோ

ஓமந்தூர் தோழர் ராமசாமி ரெட்டியார், டாக்டர் சுப்பராயன், டாக்டர் ராஜன், தோழர்கள் கோபால் ரெட்டி, சீதாராம ரெட்டி, சந்திரமௌளி, பக்தவச்சலம், மாதவமேனன் ஆகியவர்கள் முதல் பகுதி மந்திரிகளாய் நியமனம்பெற்று இருக்கிறார்கள். படையாட்சி வகுப்புக்கும், முக்குலத்தார் வகுப்புக்கும் இதில் பிரதிநிதித்துவம் இல்லை. ஆந்திராவில் கம்மா காப்பு பலிஜா என்னப்பட்ட முக்கிய பிரிவும் சரிபகுதிக்குமேல் ஜனத்தொகையும் கொண்ட வகுப்புக்கு ஏன் சரியான பிரதிநிதித்துவம் இல்லை? இவர்கள் தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் பெருவாரி மக்கள், முக்கியமான சமுதாயம். இவர்களில் நான்கில் ஒரு பகுதிகொண்ட ரெட்டிகளுக்கு 3 ஸ்தானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படி வழங்கவேண்டிய அவசியம் என்ன என்பது தெரியவில்லை. திறமையா? தகுதியா? அரசியலில் அதிகப் பழக்கமா? அல்லது மற்றவகுப்பில் இல்லாத அளவு கல்வி கேள்விகளில், அரசியல் ஞானத்தில் தேர்ச்சியா? அல்லது பிரதமர் ரெட்டியாரானதினாலா? சீதாராம ரெட்டியார் வக்கீல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோபால் ரெட்டியார் 4வது பாரம் வரை படித்தவர் (ஆனால் பணக்காரர்) என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிரதமர் ஓமந்தூர் "துவிபாஷகர் வைத்துக் கவர்னரிடம் பேசினார்" என்றும், "டாக்டர் ராஜனைக் கூட வைத்துக்கொண்டு பேசினார்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்தாப்போல் வேளாள சமுதாயத்திற்கு 2ஸ்தானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவும் அதிகம். தோழர் பக்தவச்சலம், டாக்டர் சுப்பராயன் ஆகியவர்களில் டாக்டர் சுப்பராயன் தகுதி, திறமை, பணம், காசுவிஷயத்தில் நாணயமும் அனுபவமும் உள்ளவர். இப்படிப்பட்ட இவர் இருக்கும்போது மற்றொரு வேளாளர் எதற்கு? அவரும் இவரைப் போன்றவர் என்று சொல்லப்பட்டாலும் மற்றொரு வேளாளர் இருக்கவேண்டிய அவசியம் என்ன? ஒருசமயம் மாமிசம் சாப்பிடாத வேளாளர் என்று எடுக்கப்பட்டிருந்தாலும், இரண்டு ஸ்தானம் அதிகமேயாகும். மாமிசம் சாப்பிடாத ஜாதிக்குப் பார்ப்பனரே போதுமானது.

மனிதசமுதாயத்தில் சரிபகுதி உள்ள பெண்கள் சமுதாயம் அடியோடு மோசம் செய்யப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. இது மிக அநீதியாகும்.

ஷெடியூல்டு வகுப்பாருக்கு இரண்டு ஸ்தானங்களாவது வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சட்டசபைத் தலைமை ஒரு ஷெடியூல்டு வகுப்புத் தோழருக்கு வழங்கப்பட்டிருப்பதால் அதைக் கழித்துக்கொள்ளப் பார்க்கிறார்களோ என்னமோ தெரியவில்லை—ஜனசங்கைப்படிப் பார்த்தால் அதிகம் கொடுக்கவேண்டும்.

நாடார்—கிருஸ்தவர் என்கின்ற இரண்டு கூட்டத்தையும் சரிப்படுத்தத் தோழர் "டானியல் தாமசுக்கு ஒரு ஸ்தானம் வழங்கப்படும்போல் தெரிகிறது. ஒரு வியாபார நாடாரை நியமித்து இருக்கலாம். வக்கீல்கள் அதிகமாவது வேலைக் கேடும், குதர்க்கத்துக்குந்தான் இடமாகும். மலையாளத்துக்கு ஒருஸ்தானம் வழங்கப்பட்டதில் அது அங்குள்ள மைனாரிட்டியும், மேல்ஜாதி என்னும் கொள்கையுள்ளதும், பார்ப்பனருக்கு சர்வ அடிமையான வகுப்புமாகிய நாயர் (மேனன்) வகுப்புக்கு அளிக்கப்பட்டது நீதியாகாது. ஈழவர் அல்லது தீயர் வகுப்பாருக்கு அளித்திருக்கவேண்டும். அவர்கள் நாயர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையும், தகுதியுமுள்ளவர்கள், வகுப்பு நீதிவேண்டியவர்களுமாவார்கள். அவர்களே பெரிதும் புலையர் முதலிய தாழ்த்தப்பட்ட ஜாதிக்கும் பிரதிநிதியாகத் தகுந்தவர்கள். கொச்சியில் ஒரு ஈழவ மந்திரி (தோழர் கே. அய்யப்பன்) இருக்கிறார். அவரால் அவரது சமுதாயம் நீதிபெற்று வருகிறது. அப்படி இருக்க ஏன் சென்னையில் ஈழவ மந்திரி இருக்கக்கூடாது? கர்னாடகாவுக்கு அளிக்கப்போகும் ஸ்தானம் எப்படி இருக்குமோ தெரியவில்லை. அதையாவது ஜாதி இந்து அல்லாதவருக்கு அளிக்கலாம். பார்ப்பனர்களுக்கு மொத்தத்தில் ஒரு ஸ்தானத்துக்குமேல் அளிக்கப்பட்டால் அது மகா அக்கிரமமாகும் என்றே சொல்லலாம்.

"ராஜாக்களுக்கு ஒரு மந்திரி" என்பது தேவை இல்லாததேயாகும். ராஜாக்கள் பங்குக்கு ஒரு ராஜா 10 மாதகாலம் மந்திரிப் பதவி பார்த்தாய்விட்டது. இனியும் ஆசைவேண்டாம். வக்கீல்கள்தான் அதிகம். வியாபார அனுபவம் உள்ளவர் ஒருவரும் இல்லை.

கைத்தொழில் அனுபவமுள்ளவர் ஒருவரும் இல்லை.

தொழிலாளிகள் அனுபவமுள்ளவர்கள் ஒருவரும் இல்லை. வியாபாரம் தொழில் தொழிலாளி அனுபவமுள்ளவர் யாரும் இல்லை. ஜெயிலுக்குப்

போனவர், தியாகம் செய்தவர் என்பவர்களுக்குத்தான் எல்லா பிரதிநிதித்துவ ஸ்தாபனமும் வழங்கப்படுவதாக இருக்கிறதில் இருந்து மந்திரிக்கு ஜெயில் அனுபவம்தான் வேண்டி இருக்கிறதுபோலும்.

எனவே ஜெயிலுக்கும் தியாகத்துக்கும் மந்திரிப்பதவி காரண்டி, மாற்றுப்பண்டம் என்றால் ஜெயில், தியாகம் ஆகியவற்றின் பெருமையும் பலனும் மார்வாடி வியாபாரத்திற்கே ஒக்கும் எனலாம்.

மேலும் மொத்த நியமனம் 12 மந்திரியா 15 மந்திரியா என்னும் பிரச்சினை "தியாக ஸ்தாபனம் என்கின்ற காங்கரசுக்கு மிகமிக இழிவான பிரச்சினையாகும். ஏனெனில் இது அவசியத்தைப் பொறுத்ததாக இல்லை. ஜஸ்டிஸ்கட்சி காலத்தில் ஐந்து மந்திரிகள் இருந்தார்கள். ஆச்சாரியார் மந்திரிசபை காலத்தில் 10 மந்திரிகளானார்கள். பிரகாசம் மந்திரிசபை காலத்தில் 13 எண்ணிக்கை உள்ள மந்திரிகளானார்கள். இப்போது 15ஆகலாம் என்றும் சொல்லுகிறார்கள். இந்த எண்ணிக்கை எதைப் பொறுத்தது என்றால், வேலை அதிகத்தைப் பொறுத்ததாக இல்லாமல் மந்திரிசபையைக் கெட்டியானதும் ஸ்திரந்தரமானதுமாக ஆக்குவதற்கு" என்கிறார்கள். இது மிகவும் வெட்கக்கேடான காரியமாகும். வகுப்பு நியாயமும் இல்லாமல் வாயாடிகள், கலகக்காரர்கள், தொல்லை கொடுப்பவர்கள் என்பதற்காக எலும்பு போடுவது என்பது, அந்த ஸ்தானத்தின் இழிவைக் காட்டுமே தவிர ஜனநாயகத்தைக் காட்டாது. அதாவது,

இந்த எண்ணிக்கை அதிகப்படுத்துவதானது இனம், மதம், ஜாதி வகுப்பு நிலைமையைப் பொறுத்தது என்று சொன்னாலாவது அது ஒரு அளவுக்கு ஜனநாயக ஆட்சி என்பதில் அதற்கு அருத்தம் உண்டு. அப்படிக்கில்லாமல் "இனம், மதம், ஜாதி வகுப்பு பார்ப்பது தேசியத்திற்கு விரோதம்" என்று சொல்லிவிட்டுச் சண்டித்தனம், விஷமம், குட்டிக் கலகம், சூட்சி தவிர வேறு காரணமே இல்லாமல், தகுதி, திறமை, நிர்வாக அனுபவம் என்பவைகளும் இல்லாமல், பதவிகளை அவசியத்திற்கும் அதிகமாக உயர்த்திக்கொண்டே போவதென்றால் இது பதவி வேட்டை, சுயநலம், பணக்கொள்ளை, லட்சியம் உள்ளதும், கட்டுப்பாடும் நீதி, நேர்மையும் சிறிதும் அற்றதும் என்று நம்மால் வெகுகாலமாய் சொல்லிக்கொண்டு வருவதான காங்கரசைத் தவிர வேறு எந்த ஸ்தாபனத்துக்கும் ஏற்றதல்ல என்றே சொல்லுவோம்.

---

ஜனாப் ஜின்னா அவர்கள் 'இந்தியா' என்ற பெயரை ஒழிக்க வேண்டுமென்கிறார். அதாவது, தான் குடியிருக்கும் நாட்டிற்கு 'இந்தியா' என்ற பெயர் இருக்கக்கூடாது என்கிறார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், 'இந்து' என்ற பெயரையே ஒழிக்க வேண்டுமென்கிறார். அதாவது தனது சமுதாயத்தற்கு (திராவிட சமுதாயத்திற்கு) 'இந்து' என்ற பெயர் இருக்கக்கூடாதென்கிறார்.

முஸ்லிம்கள் இனமானமும், கட்டுப்பாடுமுள்ள சமுதாயமானதால் ஜனாப் ஜின்னா சொன்னதை ஒப்புக்கொண்டார்கள். திராவிடர்களுக்கு இனமானமும், கட்டுப்பாடும் இல்லையானதால் கட்டுப்பாடாய்க் கூப்பாடு போடச் சேர மாட்டோம் என்கிறார்கள்.

இந்த இரண்டு காரியங்களும் வெற்றிபெற்றாலொழிய இரு சமுதாயங்களுக்கும் விடுதலையில்லை.

---

இப்படிப்பட்டப் பதவிவேட்டையும் சுயநலமும் கொண்ட மந்திரிகளுக்கு 500 ரூபாய் சம்பளத்தில் இருந்து இப்போழுது மாதம் 1500 ரூபாய் சம்பளமும் அதற்கேற்ற ஆடம்பரப் படியும், மற்றும் சட்டசபை மெம்பர்களுக்கும் காரியதரிசிகளுக்கும் இதுபோல் ஏற்றிக்கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்துகொண்டு "நாங்கள் தான் தியாகத்தின் சிகரம், சுயநலமற்ற மணிகள், பொதுநலத்துக்காகவே வேலை விட்டோம், சிறைசென்றோம், துறவிகள், சன்யாசிகள்" என்றெல்லாம் பிதற்றித் திரிவதென்றால் இதனால் பணமும் ஒழுக்கமும் நாணயமும் பாழாய்ப் போவது மாத்திரமல்லாமல் நாட்டில் எவ்வளவு அயோக்கியத்தனம், கலவரம், குழப்பம், சாந்தமற்றத் தன்மை, தொல்லை, துன்பம் வளர்ந்து மனித சமுதாயம் துஷ்ட மிருகத் தன்மைக்கும் விஷப் பூச்சிகள் தன்மைக்கும் அடிமையாகி அல்லல்பட்டு கீழ்நிலைக்குப் போகவேண்டி ஏற்படுகிறது? என்பதை நினைக்கும்போது யோக்கியர்களுக்கு இரத்தம் கொதிக்காமல் இருக்கமுடியாது.

இந்த நாட்டின் இந்த ஒழுக்கம் நாணயம்கெட்ட நிலைக்குப் பார்ப்பனீயம் ஒரு காரணமாக இருந்தாலும் இந்நாட்டிலுள்ள இன்றைய பிரதான பத்திரிக்கைகள் பெரிதும் காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஏனெனில் ஒரு பத்தி

ரிகைகூட இந்த ஒழுக்கம் நேர்மைஅற்ற காரியத்தைக் கண்டிக்காமல் எல்லாம் ஆதரித்து வருகின்றன.

பார்ப்பனீயத்துக்குச் சிறிது சிறிதாக அழிவு வந்துகொண்டு இருப்பது போலவே பத்திரிக்கைத் தத்துவத்துக்கும் நல்லதொரு அழிவு உடனடியாக ஏற்படாதவரை இந்நாட்டால் மனித சமுதாய ஒழுக்கம், நேர்மை, நாணயம், சமாதானம், சாந்தி, ஏற்படுவது என்பது முடியாத காரியமேயாகும் என்போம். சாஸ்திரம், புராணம், சூது, கள், விவசாரித்தனம், சினிமா முதலியவைகளால் மனித சமுதாயத்திற்கு ஏற்பட்டு வளர்ந்துவரும் கேடுகளைவிட பெரும்பாலான பத்திரிக்கைகளால் மிகமிகக் கேடும் நாசமும் ஏற்பட்டு வருகிறது.

இந்த 50 வருடங்களுக்கு உள்ளாக அதுவும் காந்தீயம் ஏற்பட்டப் பிறகு இந்த 30 வருடங்களுக்கு உள்ளாக நாட்டின் நாணயம், ஒழுக்கம், பெருந்தன்மை முதலியவைகள் வெகுதூரம் கீழ்மைப்பட்டுப் பிற்போக்கடைந்துவிட்டன. காந்தியத்திற்குப்பிறகே கிராமாந்தரம், காடு, மேடு, வனாந்தரம், பள்ளத்தாக்குகளில் எல்லாம் நாணயக்குறைவும் ஒழுக்கக் கேடும், மோச நாசமும் புகுந்து தாண்டவமாடத் துவங்கிவிட்டன. இவைகளுக்குக் காரணம் பத்திரிக்கைகளும், காந்தியமும்தான் என்று சந்தேகமற மெய்ப்பிக்கலாம்.

எனவே, இவ்வளவு கேடான நீதிகெட்ட முறையில் அமையப்பட்ட மந்திரிசபை இனியாவது இந்த நாட்டின் கூலிகள் காலிகள் ஆதிக்கத்தை ஒழிக்குமா? திராவிடர்களுக்குக் கட்டுப்பாடாகச் செய்யப்படும் கேடுகளை திருத்துமா? அல்லது ஆச்சாரியார் மந்திரிசபைபோல் ஆயிரக்கணக்கான திராவிடர்களைச் சிறைக்குள் தள்ளுமா என்பது சீக்கிரத்தில் தெரிந்துவிடும் சங்கதியாகும் என்பதில் சந்தேகமில்லை. எதற்கும் நாம் தயாராய் இருக்கவேண்டியது அறிவுடைமையாகும். ஆச்சாரி மந்திரிசபை 27 மாதம், பிரகாசம் மந்திரிசபை 10 மாதம், ஓமந்தூர் ராமசாமி மந்திரிசபை என்னும் டி. எஸ். எஸ். ராஜன் மந்திரிசபை எத்தனை நாள் என்பதை பார்ப்போம்.

"காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்ணு பாண்டம் ஓடடா"

"தூங்கையிலே வாங்குகிற
மூச்சு
இது சுழிமாறிப் போனாலும்
போச்சு"

# மாணவர் பிரசாரம்

## வேண்டுகோள்

மார்ச் 18, 19 தேதிகளில் விடுதலையில் விடுத்த வேண்டுகோளின்படி சுமார் 40 மாணவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் வந்துள்ளன. சென்னை, அண்ணாமலைநகர் பல்கலைக் கழக மாணவர்களிடமிருந்து இன்னும் விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை. எஸ். எஸ். எல். சி. தேர்வு எதிர்பாராதபடி ஒத்திப் போடப்பட்டதால் மாணவர்களிடைத் தயக்கம் ஏற்பட்டிருக்குமென நினைக்கிறேன். அவ்வாறு பாதிக்கப்படும் மாணவர்களுக்குத் தனிப்பயிற்சியளிக்கவோ, அல்லது பயிற்சியின்றியே பழக்கமுள்ள மாணவர்களை யின் பிரச்சாரத்திற்கு அனுப்பவோ தனி ஏற்பாடு செய்யப்படும்.

எனவே பிரசாரக் குழுவில் கலந்துகொள்ள விரும்பும் எல்லா மாணவர்களும் உடனே மேற்கண்ட 18, 19ந் தேதி 'விடுதலை'யில் கண்டுள்ள விபரப்படி இன்னும் ஒரு வாரத்திற்குள் அதாவது 31-3-47க்குள் தங்கள் விண்ணப்பங்களை யனுப்பிவிட வேண்டுகிறேன்.

பயிற்சி நடைபெறும் இடம், தேதி முதலியன அடுத்த அறிக்கையில் தெரிவிக்கிறேன்.

அமைப்பாளர்,
திராவிட மாணவர்,
பிரச்சாரக்குழு,
P.B. 325, மவுண்ட்ரோட், சென்னை.

o o

குறிப்பு:- இவ்வாண்டு மாணவர் பிரசாரம் மிக நல்முறையில் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

பிரசார பயிற்சி வகுப்பு ஏப்ரல் 15ம் தேதிக்குமேல் நடத்தப்படும். பெரும்பாலும் வழக்கம்போல் ஈரோட்டிலேயே பயிற்சி வகுப்பு நடைபெறலாம் என்று தெரிகிறது.

பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்குச் சாப்பாடு முதலிய வசதிகள் முன்னதாகவே ஏற்பாடு செய்யவேண்டியிருப்பதால் எத்தனை மாணவர்கள் பயிற்சியில் கலந்துகொள்கிறார்கள் என்பது திட்டமாகத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

ஆகவே பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் மாணவர் பிரசார குழு அமைப்பாளர் வேண்டுகோளின்படித் தங்கள் சம்மதத்தைக் கூடிய விரைவில் தெரிவிக்க வேண்டுகிறோம்.

பொதுக்கூட்டத்தில் ஓரளவில் பேசும் ஆற்றல் பெற்றவர் பிரசார குழு பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வது நலம்.

[ஆ-ர்]

## பதிவுத் திருமணம்

30-3-47 ஞாயிறு காலை 8-மணிக்குமேல் கும்பகோணம் இராஜா டாக்கீஸ் கொட்டகையில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையில் தஞ்சை தோழர் ஐ. குமாரசாமிப் பிள்ளை அவர்கள் பேத்தி தோழியர் ஜெயலட்சுமிக்கும், குடந்தை தோழர் கே. எஸ். சுப்ரமணியபிள்ளை அவர்கள் மகன் தோழர் கே. எஸ். இராமனுக்கும் பதிவுத் திருமணம் நடைபெறும்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ண ஆரம்பித்தார். சோசியலிசத்தையும் அனார்க்கிசத்தையும் குறித்து விவாதிக்க மார்க்ஸ் சம்மதிக்கவில்லை. இவர்களால் பாகுனினைக் குறித்துக் கொண்டு வரப்பட்டத் தீர்மானம் நிறைவேறிற்று. மகாநாட்டில் பிளவு ஏற்படலாயிற்று.

இந்த இரு பிரிவினரும் இறகொடிந்த பறவைகளைப்போல் சிறிதுகாலம் நடத்தலானார்கள். 1873ம் வருடம் நடந்த ஸ்பெயின் புரட்சியுடன் பாகுனின் கட்சி மறைந்தது.

1876ல் பிலடல்பியாவில் கூடிய மாநாட்டுடன் மார்க்ஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சங்கத்தைக் கைவிட்டனர். எனினும், மார்க்சின் சக்தி நாம் நினைத்ததற்கு மாறாகப் புரட்சியைக் குன்றச்செய்துவிட்டது. இத் க்ஷீண திசைக்குக் காரணங்கள் இரண்டு ஒன்று மார்க்ஸ் எழுதின "பிரான்சில் சிவில் யுத்தம்" என்ற அறிக்கை. மற்றொன்று மார்க்சும், எஞ்சல்சும் கூடி எழுதின குடியாட்சியின் விரோதிகள் என்ற கட்டுரை.

மார்க்சின் உடல் எப்பொழுதும் மிகப் பலவீனமாயிருந்து வந்தது. அத்துடன் நோயும் குடிகொள்ளலாயிற்று. அப்படியிருந்தும் அவர் படிப்பதை மட்டும் மட்டுப்படுத்தவில்லை. சதா நூல்கள் ஆராய்வதிலேயே இருந்துவந்தார். ரஷ்யா அமெரிக்கா முதலிய நாடுகளின் விவசாயத்தைப்பற்றி ஆராயத் தொடங்கினார். பண்ட மாற்று தலைப்பற்றியும், பணம் லேவாதேவியைக் குறித்தும் விசாரணை செய்வதில் சிறிதும் பின்வாங்கவில்லை. கணித சாஸ்திரத்திலே நிபுணராக விளங்கினார். ரஷ்ய பாஷையையும் கற்றுக்கொண்டார். தன்னுடைய ஆராய்ச்சியின் பலனை ஒன்றோடு ஒன்றாகச் சேர்த்து உருளைப்படுத்துவது அவருக்கு மிக கஷ்டமாயிருந்தது. அவரது மேஜையின் மீது குவிந்து கிடந்த கையெழுத்துப்பிரதிகளே அவரது ஆராய்ச்சியை நன்கு விளக்கிக் காட்டும் அத்தாட்சியாயிருந்தன. அவர் ஆரம்பித்த வேலைகளைப் பூர்த்திசெய்வது அவருக்குப் பெரிய மலைபோலிருந்தது. அவர் நோயால் மிகத் துன்புற்ற காலையில் அவரது நண்பர் எஞ்சல்ஸ் அவரை ஓய்வு எடுத்துக்கொள்ள வேறு தேசத்துக்கு அனுப்பிவைத்தார். சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் தனது பழைய வேலையிலேயே ஈடுபடலாயினர். இதனால் இவரைப் பிரிந்திருந்த நோய் இவரை மீண்டும் பற்றிக்கொண்டது. ஆனால் இவரது மனம் தளரவில்லை. கடிதப் போக்குவரத்துக்களை அதிகமாக வைத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் சர்வதேசிய சங்கமும் மறைந்தது. ஆனால் அவரது சேவை, அவர்செய்த நூல்கள் ஒன்றாவது வீண் போகவில்லை. ஐரோப்பா கண்டத்தின் பல பாகங்களிலும் இவரின் கொள்கை உணரப்பட்டது. இறுதிவரை போராடத் தகுந்த ஸ்தாபனங்கள் தோன்றலாயின. இப்பொழுது அவரது கொள்கையைக் கடைப்பிடித்தவர்கள் 1848ம் வருஷத்தியவர்களைப் போன்ற அரைகுறையானவர்களல்ல. இவர்கள் தொழிலாளர்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களும், மரியாதை செய்யப்பட்டவர்களுமாவர். மார்க்சின் உடல்தான் மறைந்துவிட்டதே ஒழிய அவரது உயிர்—சக்தி இன்று உலகத்தையே ஆட்டி வருகின்றது.

அவரது உத்தம மனைவி ஜென்னி நாற்பத்தைந்தாண்டு வறுமையிலே தனது கணவருடன் இணைபிரியாதிருந்துவிட்டு 1883ம் வருடம் உயிர் துறந்தார். இத்தச் சம்பவம் மார்க்சின் மனதை மிக வாதித்தது. இடிமேலிடி இடித்தாற்போல் 1883ம் வருடம் அவரது மூத்த குமாரத்தி ஜென்னியின் மரணம் அவருக்குப் பெரிய துன்பத்தை உண்டுபண்ணிற்று. இந்த இரண்டாவது சம்பவத்திற்குப் பிறகு சிலகாலம் கழிந்தபின் சிறிது சாந்தமடையலாயினார் உடலிலும் வலிமை சிறிது ஏற்படலாயிற்று. மார்க்சுமாதம் 'காபிடல்' என்ற புத்தகத்தை முடித்துவிட எண்ணினார்.


## அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் சித்திரைப் பள்ளிக்கூடம்

1947 ஏப்ரல் மாதம் 21ம் தேதியிலிருந்து 6வாரங்கள் வகுப்புக்கள் நடைபெறும். படிப்பை மத்தியில் நிறுத்தியவர்களும், ஏற்கனவே தனியாய் வீட்டில் கல்வி பயின்றவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். அவசியப் பாடல்கள் குறுகிய கால அளவில் சொல்லிக் கொடுக்கப்படும். தங்க இடமும் படிப்பும் செலவில்லாமல் கிடைக்கும். சாப்பாட்டுச் செலவு சுமார் ரூ 20 ஆகலாம். சேர விரும்புகிறவர்கள் ஏப்ரல் மாதம் 15ம் தேதிக்குள் பல்கலைக் கழகத்துக்கு மனுச் செய்து கொள்ளலாம்.

ரிஜிஸ்ட்ரார்.

அவ்வாறு எண்ணிய சில நாட்களுக்கெல்லாம் அவரது அந்தியகாலம் நெருங்கிற்று. 1883ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14ந் தேதி காலை தனது சாய்வு நாற்காலியிலிருந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தார். படித்தவண்ணமாகவே உயிர் துறந்தார். அவரது வீட்டு வேலைக்காரி எஞ்சல்சுக்கு டாக்டருக்கும் ஆள் அனுப்பினாள். எஞ்சல்ஸ் வந்து பார்க்கையில் அவரது சாய்வு நாற்காலியில் நீண்ட நித்திரைப் போவதைக் கண்டார், மனம் நொந்தார்.

மார்க்ஸ் அழிந்துவிட்டாலும் அவரது செய்கைகளை அவரது நண்பர் 1893ம் வருடம் வரை செய்துவந்தார். மார்க்ஸ் எழுதி வைத்த கைப்பிரதிகளைச் சேகரித்துப் பிரசுரம் செய்தார் தன்னால் கூடியவரை தொழிலாளர் இயக்கத்துக்கே மார்க்சைப்போல் இயன்ற தூரம் அவ்வப்போது [illegible] தார். ஆனாலும் மார்க்சை விட எவ்வளவோ குறைந்த அளவில்தான் தாம் வேலை செய்துவந்ததாக அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## திறப்பு விழா

9-3-47ல் நாமக்கல்லில் அம்பேத்கார் வாலிபர் சங்கத்தின் திறப்பு விழா தோழர் ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கே. வி இராமசாமி, க. கருப்பண்ணன், ஆர் வெரு[illegible]ப்பா, ச அ ா. நாகப்பன், வையாபுரி, ஆனைமுத்து ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினர்

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

சேந்தமங்கலத்தில் தோழர் கருணாகரன் அவர்களும், தோழியர் சின்னம்மாள் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். தமிழ் ஆசிரியர் தோழர் எழில் நிலவனார் அவர்கள் திருமணங்குறித்துச் சொற்பொழிவாற்றினார். மணத்தின் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## பதிவுத் திருமணம்

16-2-47 காலை 9மணிக்குத் திருச்சி திராவிட மருத்துவர் கழகத் தலைவர் டாக்டர் க. பிச்சைமுத்து அவர்களின் மகன் தோழர் பி. கந்தசாமிக்கும், திருச்சி தோழர் மு. பெரியண்ணன் அவர்களின் மகள் தோழியர் சுந்தரம் அம்மைக்கும் வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் திருச்சி திராவிட மருத்துவர் கழகத்தில் சீர்திருத்தப் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

'பதிவுத்திருமணம்' என்பதைப் பற்றி தோழர்கள் வேதாசலம், ஈரோடு இ. க. கருப்பையா, நாகை ா. முத்துச்சாமி, நெல்லை ா. ஷண்முகம், பொன்மலை பொன்னுசாமி டாக்டர் க. பிச்சைமுத்து ஆகியோர் பேசினர். ஈரோடு திராவிட மருத்துவர் கழகத்தின் சார்பாக செயலாளர் தோழர் இ. க. கருப்பையா வாழ்த்திதழும், சென்னை பண்டிட் எஸ் எஸ். ஆனந்தம் தந்தி வாழ்த்தும், பொன் ஆபரணமும், வெள்ளிக் கோப்பையும், பதக்கங்களும் வழங்கப்பட்டன திருமணத்தின் நினைவாகத் திராவிட கழக நிதிக்கு ரூ. 30ம், [illegible] ரூ 10ம், திராவிட மருத்துவர் கழகத்திற்கு ரூ. 5ம், குடி அரசு, விடுதலை, திராவிடமணி ஆகியவற்றிற்குத் தனித்தனியே 2ரூபாயும் நன்கொடையாக மணமக்களால் அளிக்கப்பட்டது. திருமணம் பி. முத்துசாமி அவர்களின் நன்றிகூறலுடன் 1-30 மணிக்கு முடிவுற்றது.

## சர் எ.டி. பன்னீர்ச்செல்வம் நினைவு நாள்

8-3-47 சனி மாலை 7 மணிக்கு தாராவி (பம்பாய் 17,) யில் சர் எ. டி. பன்னீர்செல்வம் நினைவு நாள் கூட்டம் தோழர் எஸ் டி. சுந்தரதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் எஸ். பெரியசுவாமி, எஸ் சுப்பையா ஆகிய தோழர்கள் மறைந்த தலைவர் சர் எ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களைப் பற்றிப்பேசினார்கள். பின் சுயமரியாதைசம் செல்லும் தோழரான எஸ். சீனிவாசன் அவர்களுக்கு மலர் மாலை சூட்டிப் பெருமைப்படுத்தப்பட்டது

## அனுதாபம்

16-3-47 ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணிக்குக் காஞ்சி நெல் வாணிகச் சங்கத் துணைத் தலைவரும், செங்கற்பட்டு, வன்னியகுல சங்கத் துணைத்தலைவரும், ஜில்லா மாவட்ட மன்ற உறுப்பினருமான தோழர் மு. அரங்கசாமி அவர்கள் இயற்கையெய்திய செய்தி கேட்டு நாம் பெரிதும் வருந்துகிறோம். எங்கள் அனுதாபத்தை அன்னார் குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## அறிவிப்பு

ஈரோடு வியாபாரம் ஜோதி & கோ சொந்தக்காரர்கள் ராமசாமி பிள்ளை, பழனியப்ப பிள்ளை, அழகேசம்பிள்ளை, அப்துல் கரீம் சாயபு ஆகியவர்கள் தாங்கள் பட்ட வியாபாரக் கடன்களைத் தீர்க்க சக்தியற்றவர்களாகிவிட்டார்கள். ஆதலால் அவர்களுடைய ஸ்தாவர சொத்துக்கள், C. S. T. மோட்டார் டிரான்ஸ்போர்ட் சர்வீஸ் கம்பனி ஷேர்கள், சொத்துக்கள் முதலியவைகளைப் பராதீனம் செய்யவோ அல்லது விற்கவோ செய்து கடன்காரர்களுக்கு அவர்களது கடன் கிடைக்காமல் செய்வார்களானால் அது கிரிமினல் குற்றமாகுமென்பது மாத்திரமல்லாமல் அதை கிரயம் முதலியவைகள் பேரால் பெற்றவர்களுக்கும், பெறுகிறவர்களுக்கும் செல்லுபடியாகாது என்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆ. வெள்ளியங்கிரி செட்டியார்,
மண்டி,
பார்க்குரோட், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE.